## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் - 2022

---

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள், கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்குரிய விடயங்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரிசோதிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன, பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு, பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்தல் மற்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றிற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை பேணிச் செல்லல் நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இன் 03 மற்றும் 08 பந்திகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள், அறிக்கையிடும் திகதி மற்றும் சமர்ப்பிப்பதற்காக அங்கீகாரம் கிடைக்கும் திகதிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அறிக்கையிடும் திகதியில் காணப்பட்ட | அவதானிப்பு சரியானது. 2023 ஆம் ஆண்டின் போது நிலுவை சம்பளக் கொடுப்பனவு | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமை தொடர்பாக சான்றுகளை வழங்கும் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்ட 02 வழக்குகள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த வழக்கு தீர்ப்புகளின் பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 4,645,296 ஆன நிலுவை சம்பளத்தை நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டது. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தி பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமானம் காலரீதியாக மாற்றமடைவதன் மீது சொத்துக்களை 03 ஆண்டுகளிற்கு அல்லது 05 ஆண்டுகளிற்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், கூட்டுத்தாபனத்தினால் ரூபா 441,813,407 ஆன காணி மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை. | காணிகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை இடம் பெறுகின்றது. | நியம ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயனுள்ள ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததால் ரூபா 154,976,666 கூட்டுப் பெறுமதியான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்ட வந்ததுடன் நியமத்தின் இலக்கம் 79(ஆ) பந்தியின் பிரகாரம் அச் சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. அதன் பிரகாரம் அச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டுத் தவறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 பிரகாரம் திருத்தியமைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. நிலையான சொத்துக்கள் பதிவேடு பௌதீக ரீதியாக இனங் காணப்பட்டு 2023 ஆம் ஆண்டின் கணக்கு கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியம ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 திகதி கூட்டுத்தாபனத்தின் மெதுவாக அசையும் மற்றும் அசையாத இருப்புக்களின் பெறுமதி ரூபா 8,597,176 ஆக இருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79 (அ) ஆம் பந்தி பிரகாரம் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேறிய புத்தகப் பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும், கூட்டுத்தாபன வளவில் மற்றும் அதற்கு வெளியில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கட்டிடங்களில் காணப்படும் விளைவற்ற சொத்துக்கள் மற்றும் காலாவதியான பழைய | அவதானிப்பு சரியானது. 2013 ஆம் ஆண்டின் போது கணக்கு நியமத்தின் பிரகாரம் தயாரிக்கும் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட பெறுமதியாகும். இருப்பு கணிப்பீட்டு அறிக்கையில் இருந்து தயாரிக்கப்பட்ட | நியம ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| சொத்துக்கள் பற்றிய போதியளவான வெளிப்படுத்தல்களை மேற்கொண்டிருக்க வில்லை. அந்த அந்த இருப்புக்களின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக தேவையான விரிவான பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அட்டவணையில் இந்த ஒதுக்கீடு மேற் கொள்ளப்பட்டுள்ளது. |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 பேரேட்டு கணக்குகளில் காணப்பட்ட மொத்தம் ரூபா 19,812,600 ஆன மீதிகளுக்கு அண்மித்த வகையில் மொத்தம் ரூபா 21,263,945 ஆன வரவு மற்றும் மொத்தம் ரூபா 1,451,345 ஆன செலவு பெறுமதி உள்ளடக்கப்பட்டு மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த வரவு மற்றும் செலவு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 02 பேரேட்டு கணக்குகளின் ஆரம்ப மீதிகளுக்கு இடையே வேறுபாட்டிற்கு காரணங்கள் பின்வருமாறு இருந்தன.<br>People,s Bank 004100110208647 2021.12.31 இல் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 373,994 ஆகும் வங்கி கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 931,060 ஆகும். 2021.12.31 இல் உள்ள வாறு தீர்வையாகாத காசோலைகளின் பெறுமதி ரூபா 557,066 ஆகும்.<br>BoC Bank 2323354 2021.12.31 இல் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 19,438,606 ஆகும். வங்கி கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 20,332,885 ஆகும். 2021.12.31 இல் உள்ளவாறு தீர்வையாகாத காசோலைகளின் பெறுமதி ரூபா 894,279 ஆகும். | பேரேட்டுக் கணக்குகளில் ஆரம்ப மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 பேரேட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,346,024 ஆக இருந்த போதும் அப்பேரேட்டு கணக்குகளில் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக ரூபா 7,357,214 கூட்டுத்தொகையாக காண்பிக்கப்பட்டதால் மீதிகளுக்கு | 03 பேரேட்டுக் கணக்குகளின் ஆரம்ப மீதிகளின் வேறுபாடு 2021.12.31 இல் உள்ளவாறு காசேடு மற்றும் விங்கிக் கூற்றின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே வேறுபாடாகும். | ஆரம்ப மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடையே ரூபா 2,011,190 ஆன வேறுபாடு காணப்பட்டது. | | |
| (இ) | பேரேட்டு கணக்கு இலக்கம் 60-1271 மற்றும் 70-3422 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 02 ஊழியர் கடன் வட்டி கணக்குகளில் காணப்பட்ட ரூபா 1,467,383 வரவு மற்றும் செலவு மீதிகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்யப்பட்டிருந்த போதும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இது தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபன ஊழியர் கடன்களுக்காக அறவிடப்படுகின்ற வட்டி சதவீதம் 4% ஆகும். ஆண்டின் போது வங்கி வட்டி வீதம் மற்றும் கூட்டுத்தாபன ஊழியர் கடன் வட்டி வீதத்துக்கு இடையே தேவையான வேறுபாடு இந்த ஊழியர் கடன் வட்டி (சொத்துக்கள்) மற்றும் பொறுப்புக்கள் கணக்கில் சீராக்கப்படுகின்றன. அந்த இரண்டு கணக்குகளின் மூலம் ஈடு செய்யப்பட்டுள்ள ரூபா 1,467,383 ஆன மீதி 2019 ஆம் ஆண்டின் போது கடன் வட்டி விகித சீராக்கமாக இருந்ததுடன் தவறுதலாக 2019 ஆம் ஆண்டின் பின்னர் சீராக்கம் மேற்கொள்ளப்படவில்லை. 2023 ஆம் ஆண்டு முதல் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் கணனி கணக்கீட்டு மென்பொருளுடாக (Ouick Book) பெற்றுக் கொண்ட நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,103,950,458 ஆன போதும் கணக்காய்விற்கு சமர்பித்த நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,247,881,012 ஆக காட்டப்பட்டதால் அம் மீதிகளுக்கு இடையே ரூபா 143,930,554 ஆன வித்தியாசம் நிலவியது. | வித்தியாசத்தை கண்டறிந்ததுடன் அவற்றை 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.. | இனங்காணப்பட்ட வித்தியாசத்தை சீராக்கி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடங்காத ரூபா 13,600,000 ஆன மோட்டார் வண்டி மானியங்களை மானியங்கள் மற்றும் உரித்து மாற்றல் கூற்றில் சீராக்கப்பட்ட ரூபா 26,450,100 ஆன மோட்டார் வண்டி மீள் மதிப்பீட்டு இலாபம் காசுப் பாய்ச்சல் | அவதானிப்பு சரியானது மீண்டும் மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தின் போது இதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றில் காசு அசைவு தொடர்பில் தாக்கமளிக்கும் விடயங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் கையேற்றல் பெறுமதி ரூபா 30,939,853 ஆக இருந்த போதும் காசு காய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 70,989,853 என காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானது. 2023 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | பிரபல திரைப்பட கட்டுப்பாட்டு சபையிடமிருந்து 2021 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய ரூபா 960,000 ஆன கட்டிடங்களின் வாடகை கணக்கீடு செய்யப்படாமையால் பெறவேண்டிய வாடகை மற்றும் திரண்ட இலாபம் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்ததுடன் அச்சபையினால் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 மே வரையான காலப்பகுதிக்குரிய குத்தகை வாடகை தொகையிலிருந்து புதிய கட்டிட நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட செலவினத்திற்காக ஈடு செய்யப்பட்டிருந்த ரூபா 13,120,000 தொகையை கணக்கீடு செய்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் புதிய கட்டிட நிர்மாணத்திற்காக அச்சபைக்கு செலுத்த வேண்டிய தொகை இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. 2023 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டிட வாடகையை சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 20,654,773 ஆன ஊழியர் கடன் மீதியில் ரூபா 545,052 ஆன இனங்காண முடியாத கடன் மீதியொன்று காணப்பட்டது. | இனங் காணப்பட முடியாத கடன் மீதியில் காணப்பட்ட ரூபா 5,830 ஆன வேறுபாடு இனங் காணப்பட்டு சீராக்கப்பட்டுள்ளது. எனினும் பிரதான பேரேடு மற்றும் உப அட்டவணைகளுக்கு இடையே 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 539,221 ஆன இனங்கான முடியாத மீதி ஒன்று உள்ளது. அதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளாக கணக்காய்வு பிரிவிலிருந்து ஆலோசணை கோரப்பட்ட போதும் அந்த உள்ளக | கடன் குழு தீர்மானத்தின் மீது இனங்காணப்பட்ட ஊழியர் கடன் மீதியை விரைவில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்படுவதால் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. கடன் குழு தீர்மானத்தின் பேரில் அடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஐ) | மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்ட பணிக்கொடை படிகள் ரூபா 2,323,223 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அதன் பெறுமதி ரூபா 2,737,750 என காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 414,527 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அவதானிப்பு சரியானது. பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கில் இரண்டு உத்தியோகத்திற்கு செலுத்தப்பட்ட பணிக்கொடை தொகையில் அவர்களால் பெற்றுக்கொண்ட கடன் தீர்ப்பனவாக உள்ளடக்கப்பட்டு இருந்ததுடன் ஒரு ஊழியருக்கு அவருக்கு உரித்தான பணிக்கொடை தொகை செலுத்தப்பட்டதாகும். ஆதலால் இது காசு கொடுப்பனவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | காசு பாய்ச்சல் கூற்றில் காசல்லாத வேறுபாடுகளின் கீழ் சீராக்கப்பட வேண்டிய பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகளில் அதிகரிப்பு பெறுமதி ரூபா 2,009,657 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்ட அப்பெறுமதி ரூபா 2,669,937 ஆக இருந்தது. | பணிக்கொடை கணிப்பீட்டின் போது ஊழியர்களின் சம்பள ஏற்றங்கள் / சம்பள அதிகரிப்பு அவரின் சேவை காலத்துக்கு சீராக்கப்படுவதால் முன்னைய ஆண்டுக்காக சீராக்கப்படுகின்றது அந்த முழு தொகையும் காசு பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | | |
| (அ) | கடன் கொடுத் தோர். | 330,280,811 | 364,301,563 | 34,020,752 | அவதானிப்பு சரியானது. சீராக்குவதற்கு நடவடிக்கை | வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | எடுக்கப்படும். | |
| (ஆ) | திரைப்பட வாடகை கடன்பட்டோர். | 411,680,539 | 439,289,504 | 27,608,965 | அவதானிப்பு சரியானது. 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 1,387,564 தொகை தீர்வு செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும். |

### 1.5.5 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் செலவினத்தை தீர்த்துக் கொள்ள வருமானம் போதாமையால் 2001 ஆண்டு முதல் பொது திறைசேரியிலிருந்து ஊழியர் சம்பளம் மற்றும் மூலதன செலவிற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் கடந்த 05 ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரி மானியம் கிடைக்க முன்னர் தொடர்ந்தும் செயற்பாட்டு நட்டம் அடையும் நிலைமை காணப்பட்டதால் தற்போது அரச நிதியுதவி மற்றும் குறுங்கால வைப்பு வட்டி வருமானம் இல்லாமல் கூட்டுத்தாபனத்தை தொடர்ந்து நடாத்திச் செல்வது நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக காணப்பட்ட திரைப்படங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் 05 சபைகளுக்கு பகிர்ந்து செல்லப்பட்ட காரணத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த வருமானம் இழக்கப்பட்டதன் பேரில் பொதுத்திறைசேரியலிருந்து பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்தது. எதிர்காலத்தில் வருமான வழிகளை தயாரித்துக் கொண்டு பொதுத் திறைசேரியிலிருந்து நிதி ஏற்பாட்டைப் பெற்றுக் கொள்வதை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் இருப்பு தொடர்பான நிலையான தன்மையை கட்டியெழுப்பதற்கும் சட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | செலவினம்/ வருமானம் | 599,276,716 | 135 நாட்குறிப்பு உறுதிப் சீட்டுகளுக்குரிய அண்மித்த | நாட்குறிப்பு உறுதி சீட்டுக்களுடன் அண்மித்த ஆவணங்கள் | உரிய அண்மித்த பதிவேடுகளுடன் நாட்குறிப்பு உறுதிச் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பதிவேடுகள் / எழுத்து மூலம் உறுதிப்படுத்தல்கள் | இணைக்கப்படாதிருந்த போதும் வேலை கோவையில் இந்த ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன 2023 ஆம் ஆண்டிலிருந்து சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சீட்டுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கடன்பட்டோர் கணக்கு – வரவு வைத்தல்<br>செலவு வைத்தல் | 329,577,291<br>291,649,659 | நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் | பதில் அளிக்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்பு உறுதி சீட்டுகள் மூலம் பேரேட்டுக் கணக்குகளில் சீராக்கத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திரைப்பட வாடகை கடன்பட்டோர் மிகை ஒதுக்கீடு | 161,855,343 | அட்டவணைகள் | வருடாந்தம் அறவிடப்படுகின்ற மிகை கட்டணங்களிலிருந்து 75% அறவிடப்படாமை அடிப்படையில் செலவு வைக்கப் பட்டிருந்தது. இதற்காக வெவ்வேறான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை 2001 ஆம் ஆண்டின் போது சபைகளுக்குரிய அனுப்புவதற்கு முன்னர் காணப்பட்ட மீதிகள் மாத்திரம் கணனியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் காலப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை இந்த மீதிகள் 21 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்ததாகும். | மிகை ஒதுக்கீடு உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்களுடன் காலப் பகுப்பாய்வு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பழைய திரைப்பட வாடகை கடன்பட்டோர் | 27,789,043 | காலப்பகுப்பாய்வு | | |

1.6 **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

1.6.1 **பெறவேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து வரும் கூட்டுத்தாபனத்தின் நலன்புரிச் சங்கத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 354,000 மற்றும் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தில் இருந்து காட்சிப்படுத்தப்பட்ட திரைப்படங்களுக்காக பெறவேண்டிய ரூபா 1,360,404 தொகை அறவிடப்பட முடியாத மீதியில் காண்பிக்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தில் உள்ளக பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் அடிப்படையில் இடம் பெற்றிருந்த இப்பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நலன்புரிச் சங்கத்திடம் இருந்து பெறவேண்டிய தொகை தொடர்பாக கொடுப்பனவு செய்யுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி நிதியத்திலிருந்து தயாரிக்கப்பட்ட திரைப்படங்களை காட்சிப்படுத்துதல் வருமானம் குறைந்ததன் அடிப்படையில் அறவிட முடியாதிருந்தது. | பெறவேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.6.2 **செலுத்த வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 44,917,713 பெறுமதியான அட்டுறு செலவுகளில் பெறுமதி ரூபா 4,523,718 ஆன அட்டுறு செலவினம் 05 ஆண்டுகளிற்கு முன்னரிலான கொடுக்கல் வாங்கல்களிற்காக கொடுக்க வேண்டியதாக இருந்தது. இதன் அட்டுறு செலவுகளை விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. ஒரு பகுதி தீர்வு செய்தல் இடம் பெற்றுள்ளதுடன் 2023 ஆண்டில் எஞ்சியவற்றை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அட்டுறு செலவினங்களை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.7 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனச் சட்டத்தின் 4 (ஊ) பிரிவு | இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் திரைப்படங்கள் தொடர்பான சந்தை ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி திட்டங்களுக்காக தலைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. திட்டங்கள் தொடர்பாக கொழும்பு பல்கலைக் கழகத்துடன் கலந்துரை யாடுவதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது. | வியாபார சந்தை ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஒக்டோபர் 02 ஆந் திகதிய | 2021 ஆண்டு வரை கூட்டுத்தாபனத்திடம் 14 | தற்போது சில மோட்டார் வாகனங்களை திருத்தி | சுற்றறிக்கை பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2 (அ) மற்றும் (ஆ) பந்தி | மோட்டார் வாகனங்கள் காணப்பட்டதுடன், 2020 ஆண்டு முதல் 06 வாகனங்கள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. 2022 ஆண்டில் 05 மோட்டார் வாகனங்களை மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தி இருந்ததுடன், இச் சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்தி பயன்படுத்த அல்லது வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய வாகனங்களை எதிர்காலத்தில் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | ஓட்டத்தில் ஈடுபடுத்தாத வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தி | தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் 2022 ஆம் ஆண்டினை மேவுகை செய்யப்பட்ட வகையில் தந்திரோபாய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது 2022 ஆண்டினை மேவுகை செய்யும் வகையில் தந்திரோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை விடயம் இவ்வாறு இருக்கையில் 2023-2025 வரை கூட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொண்டு வரிசை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சீராக்குவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டல் இருந்து தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தந்திரோபாய திட்டமொன்றை தயாரிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 30,688,601 ஆன மிகையாகக் காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,417,553 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 21,271,048 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டினுள் வருமானம் ரூபா 81,719,646 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரைப்பட தயாரிப்பு மற்றும் திரையரங்குகளை நவீன மயப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட கடன் தொகையில் மொத்தம் ரூபா 83,517,103 மற்றும் திரையரங்குகளிலிருந்து பெற வேண்டிய மொத்த நிலுவை தொகை ரூபா 411,680,538 உள்ளடங்கலாக ரூபா 495,197,641 கூட்டுத்தொகையான பெற வேண்டிய தொகையில் மொத்தம் ரூபா 348,464,266 ஆன மிகை அறவீடு மற்றும் ஐயக்கடனாக ஒதுக்கப்பட்டமையினால் அத்திகதியில் அறவிடப்படக் கூடிய தேறிய கடன் மீதி ரூபா 146,733,375 ஆக இருந்தது. மேலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அதாவது மொத்த கடன்பட்டோரில் திரையரங்குகள் கடன்பட்டோர் மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வருவதுடன் அப்பணத்தை முறையாக உரிய காலத்திலும் அறவிடுவதற்கு கூட்டுத்தா பனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த திரையரங்குகளில் தற்போது 143 மாத்திரமே செயல்படுத்தப்படுகின்றன. எஞ்சிய திரையரங்குகள் அனைத்தும் மூடப்பட்டுள்ள துடன் அவற்றின் உரித்தாளர்களை கண்டு பிடிப்பதற்கு முடியாதுள்ளது. தற்போது செயற்பாட்டில் உள்ள சினிமா கொட்டகைகளில் இருந்து நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மூடப்பட்டுள்ள சினிமா கொட்டகைகளில் இருந்து நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கடன் தவணை மற்றும் வட்டி அறவீடு தொடர்பாக ஏற்பாடு முறையாகவும் செயற்திறனாகவும் செயல்படுத்த வேண்டும். . |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்கு பெற வேண்டிய நிலுவை தொகையை அறவிடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2023 செப்தம்பர் 23 ஆம் திகதி வரை 2023 ஆம் ஆண்டிற்காக எந்தவொரு குழுக் கூட்ட மொன்றும் நடாத்தப்பட்டிருக்க வில்லை. நிலுவை தொகையை அறவிடுவதற்குரிய பரிந்துரைகளை வழங்குவதற்கு குழு தவறியிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிட்டிய 10 ஆண்டுகளின் நிலுவை கடன் மற்றும் நிலுவை தொகையை முறையான நடைமுறையொன்றின் பிரகாரம் அறவிடுவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தினாலும் | புத்த சாசன அமைச்சின் கீழ் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் அமைச்சின் பிரதிநிதியுடன் கடன் குழு ஒரு சந்தர்ப்பத்தின் போது கூடியது. அமைச்சு மாற்றத்தின் அடிப்படையில் கடன் குழு பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்ற அமைச்சின் பிரதிநிதித்துவம் பெயரிடப்படாமை காரணமாக இத்தாமதம் ஏற்பட்டுள்ளது கூட்டுத்தாபனத்தின் குழு அங்கத்தவர்கள் பல சந்தர்ப்பங்களில் கூட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டனர். | கடன் அறவிடல் குழுவின் தீர்மானத்தை விரைவில் பெற்றுக் கொள்வதற்கும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் நிலுவைத் தொகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும். அந்த ஆலோசனையின் பிரகாரம் கடன்களை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் திபிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவிற்கு சொந்தமான குருதுவத்த கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மு.தி.கோ 9848 ஆம் வரிபடத்தில் துண்டு இல 01 கொண்ட 1.1235 ஹெக்டேயார் அளவான காணியில் அமைந்திருந்தது. இந்த காணியின் சட்ட ரீதியான உரித்தினைக் கூட்டுத்தாப னத்திற்கு சுவீகரிக்கப்படாமல் பிரதான அலுவலகம் உட்பட சில கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அங்கு கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள 7702 ஆம் திட்ட வரைபடத்தில் 1.0642 ஹெக்டேயர் அளவிலான 02 காணிகள் 0.8425 ஹெக்டேயர் அளவிலான 04 ஆம் இலக்க அரச காணி 02 பகுதிகள் 2000 மே 16 ஆந் திகதி விசேட மானிய பத்திரங்கள் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள காணி, காணி பதிவாளரின் பதிவிற்காக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரால் 2007.10.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் காணியில் ஒரு பகுதி நகர தேர்ஸ்டன் கல்லூரியின் ரக்பி விளையாட்டரங்கிற் காக வழங்குமாறு அப்போதய அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கட்டளையின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி செயலாளரால் 2007.12.08 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்ததால் அப்பகுதியை அகற்றி எஞ்சிய பகுதிக்காக மீண்டும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்குரிய சட்டரீதியான உரித்து உறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் இதுவரை உரிய உரித்து உறுதியை வழங்குவதற்கு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காணியின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இருப்பு கணிப்பீட்டு பத்திரத்தின் பிரகாரம் பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 5,253,887 | 2023 ஆம் ஆண்டின் கணக்கு புத்தகங்களிலிருந்து | பௌதீக ரீதியில் இல்லாத திரைப்பட இருப்பு தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான திரைப்பட இருப்பொன்று இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த இருப்பு தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கூற வேண்டியவர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்பட விநியோக தரகுத் தொகை கூட்டுத்தாபனத்தின் பிரதான வருமான மூலாதாரமாக இருந்ததுடன் குறிப்பிட்ட காலமாக தனியார் துறை நிறுவனங்கள் மூலம் திரைப்படங்கள் விநியோகித்தல் இடம் பெற்று இருந்தது. அமைப/21/1024/305/022 மற்றும் 2021 ஜுன் மாதம் 17 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் திரைப்பட விநியோகம் மற்றும் காட்சிப்படுத்துவதற்குரிய நடைமுறை கூட்டுத்தாபனத்திற்கு கையேற்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2023 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை மேற்படி விடயத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு கூட்டுதாபனத்தின் உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ‘‘தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் அது தொடர்பான வழிகாட்டல்’’ இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானம் மற்றும் அதற்கு எதிராக உருவாகிய நீதிமன்ற நடவடிக்கை கூட்டத்தாபன தரப்பினருக்கு சாதகமான வகையில் தீர்வு செய்வதற்காக நாம் உயர்ந்த வகையில் நடவடிக்கை எடுத்தவுடன் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் கூட்டுத்தாபன விநியோக மற்றும் காட்சிப்படுத்தக் கூடிய நடைமுறையை தயாரித்து அந்நடைமுறை செயற்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது எவ்வாறாயினும் திரைப்பட விநியோக செயற்பாட்டை கூட்டுத்தாபனத்திற்கு கையேற்பதற்காக குறித்த வர்த்தமான அறிவித்தலை தயாரித்து வரிசை அமைச்சரின் (பிரதமரின்) கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இதற்காக இதுவரை பொறுப்பேற்றல் இடம் பெற்று இருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் நலனுக்காக அமைச்சரவை வழங்கிய தீர்மானத்தை செயற்படுத்துவதற்கும் அதற்கான வர்த்தமானியை வெளியிடுவதற்கும் உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 224 ஆம் இலக்க வளாகத்தில் அமைந்துள்ள தனி மாடிக் கட்டிடம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் பிரபல்யமான நாட்டிய கட்டுப்பாட்டு | பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | புதிய கட்டிடத்தின் நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த குத்தகை உடன்படிக்கை மற்றும் 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக 2017 சனவரி 23 ஆந் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இரு தரப்பினரும் இணங்கியிருந்த போதும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட 06 மற்றும் 08 ஆம் இலக்க நிபந்தனைகளை மீறி குத்தகைக்கு வழங்கியிருந்த கட்டிடத்தை உடைத்து அகற்றி 2576 சதுர அடி அளவிலான இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப் பட்டிருந்தது. | | வேண்டியிருந்ததுடன் இந்த விடயம் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினருக்காக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்களை பாதுகாப்பதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 224 ஆம் இலக்க வளாகத்தில் அமைந்துள்ள புதிய கட்டிடத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் 2016 மே 16 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 சனவரி 08 ஆந் திகதி நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு காலம் கடந்ததன் பின்னர் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதி கட்டுப்பாட்டு சபையால் கட்டிட நிர்வாகத்திற்கு உரிய அங்கீகாரம் வழங்குதலை உறுதிப்படுத்தி இருந்தது. எனினும் இரு தரப்பினராலும் புதிய கட்டிட நிர்மாணம் அதன் உரித்து மற்றும் செலவினத்தை தீர்வு செய்தல் தொடர்பான நிபந்தனைகள் உள்ளடக்கிய உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது கலந்துரையாடி எதிர்வரும் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | புதிய கட்டிட நிர்மாணம் அதன் உரித்து மற்றும் செலவினத்தை தீர்வு செய்தல் தொடர்பான நிர்பந்தனைகளை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | புதிய வாடகை உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்குரிய மதிப்பீட்டு அறிக்கையின் தாமதம் காரணமாக 2019 ஜனவரி 1 ஆம் திகதி முதல் 2022 மே 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய குத்தகை வாடகைக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வில்லை. முறையான உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ளும் வரை திருத்தங்களுக்கு உட்பட்டு 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை மதிப்பிடப்பட்ட ரூபா 400,000 அளவிலான மாத வாடகையில் 20 சதவீதம் பணமாகவும் எஞ்சிய 80 சதவீதம் கட்டிட நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட கிரயத்திற்கு ஈடு செய்வதற்கும் இரு தரப்பினரும் இணங்கியிருந்த போதும் 2023 மார்ச் 14 | அவதானிப்பு சரியானது கலந்துரையாடி எதிர்வரும் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குத்தகை காலத்தை முடிவுறுத்துவதற்கு முன்னர் புதிய மதிப்பீடொன்றை பெற்றுக் கொண்டு புதிய உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதி வரை குத்தகை உடன்படிக்கை மேற்கொள்வதற்கு தவறி இருந்தது. | | |
| (ஈ) | இறுதியாக உள்ளடக்கப்பட்டிருந்த உடன்படிக்கை முடிவடைந்து 04 ஆண்டுகளின் பின்னர் 2022 ஜூன் 1 ஆம் திகதி முதல் 2024 மே 31 ஆம் திகதி வரை 2 ஆண்டு காலப்பகுதிக்காக 2023 மார்ச் 14 ஆம் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது அந்த உடன்படிக்கையில் பிரபல நாட்டிய கட்டுப்பாட்டு சபைக்கு செலுத்த வேண்டிய தொகை தொடர்பான நிபந்தனைகள் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. கலந்துரையாடி எதிர்வரும் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிரபல நாட்டிய கட்டுப்பாட்டு சபைக்கு செலுத்த வேண்டிய தொகை தொடர்பான நிபந்தனைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 23 ஆம் திகதி நடைபெற்ற 1204 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த GB - 1371 ஆம் இலக்க வேன் வண்டியை முறையான நடைமுறைகளின் பிரகாரம் திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் 02 ஆண்டுகளுக்கு அணமித்த காலம் கடந்திருந்த போதும் வேன் வண்டியை திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வண்டியை விற்பனை செய்வதற்கான முதலாவது பணிப்பாளர் சபை தீர்மானம் இடைநிறுத்தப்பட்டு பின்னர் 2021 நவம்பர் 23 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருந்த போதும் அப்போது திறைசேரியின் அரச செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கை காரணமாக இந்த வண்டியை திருத்து வதற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட வில்லை. தற்போது குறித்த வண்டியை திருத்தம் செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | திருத்தம் செய்து பயன்பாட்டுக்கு எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் மொத்த பெறுமதி ரூபா 870,659 ஆன மென் படங்கள் மற்றும் ஆய்வுகூட பொருட்கள் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் காலாவதியாகி இருந்தமை மற்றும் நிகழ்காலத்தில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட துடன், முன்னைய ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையிலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்த இந்த விளைவற்ற சொத்துக்களை கைதவிர்ப்புச் | அவதானிப்பு சரியானது. இச்சொத்துக்களை இனங் கண்டுள்ளதுடன் உரிய நடைமுறையொன்றின் பிரகாரம் கைதவிர்ப்பு செய்ய உள்ளது. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்களை கணிப்பீட்டுச் சபை தீர்மானங்கள் மற்றும் காணப்படும் சட்டங்கள், விதிகளின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | | எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 224 ஆம் இலக்கத்தை கொண்ட வளவில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் முதலாம் மாடி 4660 இலக்க குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் 2019 சனவரி 14 ஆம் திகதி வரை மாதாந்தம் ரூபா 315,000 ஆன வாடகை அடிப்படையில் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தம் நாளாதுவரையாக்கப் படாமலும் மொத்தம் ரூபா 12,111,000 ஆன நிலுவை குத்தகை தொகை செலுத்தப்படாமலும் கட்டிடத்தை பயன்படுத்தி 2022 மார்ச் 28 ஆம் திகதி கட்டிடம் மீண்டும் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2023 மே மாதம் வரை இந்த நிலுவை குத்தகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கா திருந்ததுடன், 2022 மார்ச் 28 திகதிக்கு பின்னர் அக் கட்டிடம் பயனுள்ள பணிக்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | 2014 ஜனவரி 14 ஆம் திகதி முதல் 2019 ஜனவரி 14 ஆம் திகதி வரை மாதம் ஒன்றுக்கு ரூபா 315,000 வீதம் குத்தகை வாடகை அடிப்படையில் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்துடன் கூட்டுத்தாபனம் 4660 ஆம் இலக்கத்தின் குத்தகை உடன்படிக்கை மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் குத்தகை உடன்படிக்கை நாளது வரை யாக்கப்பட்டிருக்கவில்லை. 224 கட்டிடத்தின் மதிப்பீட்டு அறிக்கை வழங்கப் பட்டிருந்த போதும் மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் குத்தகை கொடுப்பனவினை செலுத்துவதற்கு அந் நிறுவனம் இணங்கி இருக்கவில்லை அவர்களுடன் மேற்கொண்டு கலந்துரையாடலின் போது முன்னர் காணப்பட்ட குத்தகையான ரூபா 315,000 வீதம் நிலுவை தொகையை கொடுப்பனவு செய்வதற்கு இணங்கி இருந்தனர். | நிலுவை குத்தகையை அறவிடுவதற்கும் கட்டிடங்களை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் பிரதான களஞ்சியத்தில் 10 ஆண்டுகளை கடந்த 7,692 திரைப்பட சஞ்சிகைகள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டு விளைவற்று காணப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஆவனங்கள் மூலம் கிரயம் அல்லது தற்போதய பெறுமதி இனங்காண முடியாத இப்பொருட்கள் தொடர்பாக முன்னைய ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை ஊடாக சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் சேதத்திற்கு உட்பட்டிருந்த இப்பொருட்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் வெளியீடுகளில் அதிகமானவை ஆண்டறிக்கைகளாகும். எஞ்சிய புத்தகங்களை விற்பனை செய்வதற்கும் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பதிலில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் எஞ்சிய புத்தகங்களை விற்பனை செய்வதற்கும் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைத்திட்டங்களின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலாநிதி ''லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்'' அவர்கள் பெயரில் கூட்டுத்தாபன வளாகத்தினுள் நூதனசாலையொன்றை மற்றும் நூலகமொன்றை நிர்மாணிப்பதற்காக நிர்மாண மற்றும் மதியுரை நடவடிக்கைகளின் மதிப்பிடப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 99,965,061 இற்கு அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்க இரு தரப்பு ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டு 2019 ஏப்ரல் 05 ஆம் திகதி அதன் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நகர அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் அமைச்சரவை அங்கீகாரமின்றி ஆரம்பிக்கப்பட்ட இந்த நிர்மாணிப்பிற்கு 2022 திசெம்பர் 31 இல் ரூபா 3,134,107 ஆன தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை ஊடாக சுட்டிக் காட்டப்பட்ட இந்த நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கைவிடப்பட்டிருந்ததுடன், நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட இந்த கட்டிடத்தில் உள்ள இரும்பு கம்பிகள் துரப்பிடித்து கடுமையாக அரிக்கப்பட்டிருந்தமையால் கட்டிடம் சேதமடைந்து வந்த கொண்டிருந்தது. | இச்செயற்திட்டத்திற்காக அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் மூலம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இரு தரப்பு உடன்படிக்கை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது நிதிஏற்பாடு இல்லாமையால் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதற்காக புலனாய்வொன்று நடைபெற்று வருகின்றது. | தற்போதய செயற்பாடுகளை விரைவில் பூர்த்தி செய்து 2021 யூலை 19 ஆந் திகதி பொது முயற்சிகள் குழுக்கூட்டத்தின் போது வழங்கப்பட்டிருந்த ஆலோசனைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் III ஆம் பிரிவு 16(2) பந்தி மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் வரைவு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள், கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்க வேண்டிய போதும், | அவதானிப்பு சரியானது. அமைச்சு மாற்றப்பட்ட காரணத்தினால் 2021 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் அரச கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதில் தாமதம் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அபிப்பிராயத்தை வழங்கும் வரை 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டது. | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை உரிய திகதியில் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகளை, சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கூட்டுத்தாபனத்தின் 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 05 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2023 யூலை 28 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 4.2 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் குறித்த நிதி ஆண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் 03 மொழிகளுடன்கூடிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தா பனத்தின் 2018, 2019 மற்றும் 2020 இன் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 மற்றும் 2019 இன் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குரிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரதியொன்று 2023.10.04 ஆந் திகதி கிடைத்துள்ளதுடன் கௌரவ அமைச்சரின் கையொப்பத்துடனான மேவுகை கடிதம் கிடைத்த பின்னர் குறித்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.3 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் VII ஆம் பகுதி 40 (1) பந்தியின் பிரகாரம் குறித்த நிறுவனத்திற்காக தமது நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதும், 2021 திசெம்பர் வரை உள்ளக கணக்காய்வாளர் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவில் சேவையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் கூட்டுத்தாபன சேவையில் இருந்து விலகிய பின்னர் கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவு செயலற்று காணப்பட்டது. | அவதானிப்பு சரியானது. அரசின் மூலம் புதிய ஆட்சேர்ப்பிற்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை. எதிர் காலத்தில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |